Widening of Ramakrishna Mutt Road

*537 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the work relating to the widening of the Ramakrishna Mutt Road and the bridge in Mylapore, Madras has been taken up; and

(*b*) if so, when the work will be completed?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இராமகிருஷ்ண மட சாலையை விரிவுபடுத்தும் வேலை மட்டும் வேகமாக நடைபெறுகிறது. விரைவில் அவ்வேலை முடிவுறும்.

இராமகிருஷ்ண மட சாலைப் பாலத்தை விரிவுபடுத்தும் வேலைக்கான தொழில் நுணுக்க முறைப்பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எவ்வளவு விரைவில் அவ்வேலையை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் அவ்வேலை ஆரம்பிக்கப் படும்.

Bridge across Adyar near Kottur

*538 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sanctioned any scheme for the construction of a road bridge across Adyar river near Kottur; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ரூ. 26.00 இலட்ச மதிப்பீட்டுச் செலவுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதிக அகலமுள்ளதாக அமையுமாறு, திட்டம், நெடுஞ் சாலை ஊரகப்பணித் தலைமைப் பொறியாளரால், மாற்றப்படுகிறது.